www.tamilarangam.net

# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
# EELAM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRONT

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
EPRLF

24.2.'86.

**ஐக்கியத்தின் அவசியத்தைப் பூரணமாக உணர்கிறோம்.**

துப்பாக்கி மொழி புரியக் கூடியவர்களோடு துப்பாக்கிகளூடாகவே பேச முடியும். ஈழப்போராட்டத்தை நசுக்க சிறிலங்கா அரசு முனைப்புடன் செயற்பட்டுக்கொண்டு இருக்கிறது. இராணுவ வெறியாட்டத்தாலும், விமானத் தாக்குதல்களாலும் எமது மக்கள் கொன்றொழிக்கப் படுகின்றனர். இந்த நெருக்கடியான சூழ்நிலையில் போராளிகளிடையேயான ஐக்கியத்தின் அவசியம் மென்மேலும் வலுவடைகின்றது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் விடுதலை இயக்கங்களிடையேயான ஐக்கியத்துக்காக விடாப்பிடியாக உழைப்போம். ஈழப்போராட்டச் சூழ்நிலைகளாலும், சர்வதேசியத் தேவைகளின் அடிப்படையிலும் பல்வேறு குறைபாடுகள் இருந்தபோதும் ஈழத்தேசிய விடுதலை முன்னணியைக் காப்பதில் எமது முழுமையான பங்கைச் செலுத்தினோம். இயக்க முரண்பாடுகளால் சகபோராளிகள் கொல்லப்படும் கோரநிகழ்வுகளுக்கு எதிராக நாம் விடாப்பிடியாக போராடி வந்தோம்:

24.11.85இல் சர்வதேசப் போர்ப்பாசறையில் பயிற்சி பெற்ற எமது தோழர் கெப்டன் ரீகன் தமிழீழ விடுதலைப் புலிகளால் திட்டமிட்ட முறையில் கோரத்தனமாக படுகொலை செய்யப்பட்டார். கோரநிகழ்வு அரங்கேறிய போதும் நாம் பொறுமை இழக்கவில்லை. எமது துப்பாக்கிகளை சகபோராளிகளுக்கு எதிராகத் திருப்பவில்லை. மக்கள் மத்தியில் இப்படுகொலையின் பின்னணியை விளக்கிப் பிரச்சாரம் செய்தோம். போராளிகளின் சமாதிகளின்மேல் ஐக்கியம் சாத்தியப் படுமா? எனக் கேள்வி எழுப்பினோம். தோழர் ரீகனின் இரத்தம் உறையும் முன்னால் அத்துயரத்திலிருந்து நாம் மீளமுன்னால் மீண்டும் 20.2.86 அன்று அதிகாலையில் கூலிப்படைகள்மீது தாக்குதல் நடத்த கோட்டை முகாமை நோக்கி முன்னேறிய எமது வீரமிக்க தோழரும் சர்வதேச போர்முறைப் பாசறையில் பயிற்சி பெற்றவருமான தோழர் அமீர், தமிழீழ விடுதலைப் புலிகளினால் திட்டமிட்ட முறையில் படுகொலை செய்யப்பட்டார். இதன் பின்னரும்கூட நாம் பேச்சுவார்த்தையிலேயே இறங்கினோம். இப்பேச்சுவார்த்தையின் அடிப்படையில் எம்மால் கைது செய்யப்பட்ட தமிழீழவிடுதலைப் புலிகள் உறுப்பினர் மூவரை அவர்களிடத்தில் ஒப்படைத்தோம். அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களையும் திருப்பி வழங்கினோம். சகதோழனின் இழப்பாலும் தமிழீழ விடுதலைப் புலிகளால் இழப்புகள் எமக்குத் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாலும் கொதிப்புற்று எழுந்த எமது தோழர்களை நிறுத்துவதாகவும் கூறியிருந்தோம். இவ்வளவுக்கும் பின்னால் 21.2.86 அன்று இரவு சுமார் ஒன்பது மணியளவில் தமிழீழவிடுதலைப் புலிகள் எமது மக்கள் விடுதலைப்படை முகாம்மீது தாக்குதல் நடத்த முற்பட்டது. தற்காப்பு நோக்கங்களுக்காக நாம் திருப்பித் தாக்கியதில் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் சிலர் காயமடைந்திருக்கலாம். தாக்குதலில் ஈடுபட்டு தப்பியோடிய இருவரை தமிழீழ விடுதலை இயக்கத்தினர் கைது செய்து விசாரித்ததில் தாம் புலிகள் என்பதை ஒப்புக்கொண்டனர். இதன் பின்னர்புறப்பட்டுச் சென்ற எமது தோழர்களை யாழ்நகரத்தின் முக்கியமான சந்தி ஒன்றில்

தொடர்ச்சி மறுபக்கம்..

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்ச்சி.....

வழிமறித்த புலிகளின் காவலுக்கு நின்றவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய முற்பட்டபோது பதிலுக்கு நாமும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தோம். அச்சூழலில் இருந்த புலிகளின் முகாம்களில் இருந்து தொடர்ச்சியாக தாக்குதல் நடாத்தப்பட்டது. பதில் தாக்குதலில் தமிழீழப் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவர் கொல்லப் பட்டார். காயமடைந்த புலிகளில் ஒருவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சேர்த்தோம்.

இத்தகைய சம்பவங்களும் இதைத்தவிர ஆங்காங்கே நடைபெற்ற தமிழீழவிடுதலைப் புலிகளின் எரிச்சலூட்டும் நடவடிக்கைகளையும் தொடர்ந்து இதனை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவருவதில் நாமும் பதில் தாக்குதலில் ஈடுபடவேண்டி வருமென; தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அறிவித்தோம். இச்சந்தர்ப்பத்தில் பொது நபர்கள் சிலரின் தலையீட்டின்பேரில் இன்று 22.2.86 நண்பகல் 12.00 மணியளவில் மேற்கொள்ளப் பட்ட பேச்சுவார்த்தைகளில் கைது செய்யப்பட்ட தோழர்களும், ஆயுதங்களும், கொல்லப் பட்டவர்களும் பரஸ்பரம் கைமாற்றப்பட்டனர்.

ஐக்கியத்தின் அவசியத்தினை நாம் பூரணமாக உணர்கின்றோம். ஐக்கியத்தைக் காரணம் காட்டி எமது வீரமிக்க தோழர்களை இரத்தவெறியர் களுக்கு பலி கொடுக்க நாம் தயார் இல்லை. ஐக்கியத்தை எம்மிடம் கூடுதலாக வலியுறுத்து பவர்கள் முதலில் அதனை ஐக்கியத்தைச் சீர்குலைப்பவர்களிடம், மேலாதிக்க உணர்வோடு சகபோராளிகளை கொன்றொழிப்பவர்களிடம் வலியுறுத்த வேண்டுமென தோழமையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

போராட்டக் கடமைகள், தேசியத்தேவைகள் மீதான எமது பொறுப் புணர்வை பலவீனமாகக் கருதுபவர்களுக்கு நாம் வேறு வழிகளில் பாடம் கற்பிக்க நிர்ப்பந்தி க்கப் பட்டுள்ளோம். தோழர்களின் பலியெடுப்பால் கொதிப்படையும் தோழர்களுக்கும், மக்களுக்கும் பதில் சொல்லவேண்டிய தேவை எமக்குள்ளது. இயக்கங்களிடையேயான மோதல் தவிர்க்கப்பட வேண்டியவை: இதனால் ஏற்படும் இழப்புகள் அநியாயமானவை. ஆனால் துப்பாக்கி மொழி மட்டுமே புரியக்கூடியவர்களோடு துப்பாக்கிகளாலேயே பேசவேண்டிய தவிர்க்க முடியாத நிர்ப்பந்த நிலையில் உள்ளோம் என்பதைக் கூற விரும்புகிறோம்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த தோழர் அமீன் படுகொலை தொடர்பாக ஈழத்தில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம்.

---

அன்று ஒரு தோழன்-றேகன்!
மீண்டும் ஒரு தோழன் ஜெனநாதன் எனப்படும் அமீன்!
இன்னும் எத்தனை தடவைகள் இப்படி நடக்கும்?

இன்று 20.2.86 அதிகாலை 1.30 மணியளவில் தோழர் அமீனை சக இயக்கம் ஒன்றின் துப்பாக்கி வேட்டுக்கள் பலியெடுத்தன. நேற்று மாலை எதிரிப்படைகள் எம்மக்கள் மீது மேற்கொண்ட விமானத் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுப்பதற்காக கோட்டை இராணுவ முகாம் மீது தாக்குதல் நடாத்த மக்கள்விடுதலைப் படைத் தோழர்கள் சென்றனர். கோட்டை முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் காவலர் குழுவிடம் எமது தோழர்கள் தம்மை இனம் காட்டி விட்டு கோட்டை முகாமை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தனர். இவ்வேளை எமது தோழர்கள் சென்று கொண்டிருந்த பகுதிகளில் இருந்து 50 யார் முன்பாக நின்று கொண்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மற்றொரு குழுவினர் எமது தோழர்களை நோக்கி எவ்வித எச்சரிக்கையும் செய்யாமலேயே துப்பாக்கிப் பிரயோகம் செய்யத் தொடங்கினர். இவ்வேளையில் எமது தோழர்கள் சமிக்ஞை மூலம் உரத்த சப்தமிட்டு தம்மை இனம் காட்டினர். எதிரில் நின்றவர்கள் சக இயக்கத்தினர் என்பதை தெளிவாக இனம் கண்டு கொள்ளக் கூடியதாக இருந்ததால் எமது தோழர்கள் பதில் தாக்குதல் எதும் மேற்கொள்ளவில்லை. எமது தோழர்கள் தம்மை இனங் காட்டியபோதும் தமிழீழப் புலிகள் இயக்கத்தினர் தொடர்ந்து மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் எமது உன்னத தோழனும் சர்வதேச விடுதலை இயக்கமொன்றின் பாசறையில் பயிற்சி பெற்றவருமான தோழர் அமீன் கொல்லப்பட்டார்.

எங்கள் தோழன் கொல்லப்பட்டதும் தோழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகமும் திட்டமிடப்பட்டமுறையில் நடைபெற்றதென்று நாம் கருதுகின்றோம். எனெனில் கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் சர்வதேச விடுதலை இயக்கமொன்றின் பாசறையில் பயிற்சி பெற்றவரான வன்னிப் பிராந்தியத் தளபதி தோழர். றேகன் படுகொலை செய்யப்பட்டமை மேலும் பல கசப்பான அனுபவங்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் ஏற்படுத்தப் பட்டமை யாழ்ப்பாணத்துக் கோட்டை இராணுவ முகாமைச் சுற்றி கண்காணிப்பில் ஈடு பட்டுள்ள எமது தோழர்கள் விரட்டப்பட்டமை கோட்டை முகாமை நோக்கிச் சென்று கொண்டிருந்த எமது தோழர்கள் முதலில் நின்றிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு இனங்காட்டி விட்டுச் சென்றதால் முன்னால் நின்ற தமது சகாக்களுக்கு எமது தோழர்கள் வரும் செய்தி கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

காவலில் ஈடுபட்டுள்ள எந்தக் குழுவும் முதலில் எச்சரிக்கை செய்து வருவது எதிரிகளை என்று உறுதி செய்த பின்னரே துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டும். ஆனால் எவ்வித எச்சரிக்கையும் செய்யவில்லை என்பதுடன் எமது தோழர்கள் தம்மை அடையாளம் காட்ட எடுத்த நடவடிக்கைகளையும் அலட்சியம் செய்துள்ளனர். எமது தோழர்கள் சாதாரண உடையில் காணப்பட்டதோடு நின்றிருந்த பகுதியில் வெளிச்சமும் இருந்தது. இவ்வித காரணங்களால் எமது தோழன் கொல்லப்பட்டது ஒரு திட்டமிட்ட நடவடிக்கையே என நாம் கருதுகின்றோம்.

நாம் நேசிக்கும் மக்களின் விடுதலையை வென்றெடுக்க களத்து மேட்டில் கரம் கோர்க்க வேண்டியவர்கள் முரண்பட்டுக் கொள்வதும் மோதிக் கொள்வதும் எதிரிக்கு வலுவூட்டும் என்பதால் எமது உன்னதமான தோழனை பலியெடுத்த போதும் நிதானமிழக்காது செயற்படுகிறோம். எமது தோழன் கொல்லப்பட்டது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பொறுத்தே இது தொடர்பான எமது நடவடிக்கைகளும் அமையும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வீர வணக்கம்!

தோழனே! உனது மரணம் மிகவும் கொடியது.

விழிகளில் எம்மிடம் கண்ணீர் இல்லை.

எம்மையே உமக்கு அர்ப்பணம் செய்கிறோம்.

நீ நேசித்த மக்களின் விடுதலையை வென்றெடுக்கும்வரை ஓய மாட்டோம்.

என்றும் வெற்றிக்காக.

-- மக்கள் விடுதலைப் படை --

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்